வால்பாறையில் ஜமாபந்தி: 28 மனுக்களுக்கு தீர்வு

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் நிறைமதி தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சி.

வால்பாறை, ஜூன் 20: வால்பாறையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஜமாபந்தியில் 28 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் நிறைமதி தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார். இதில், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, ஜாதிச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மனுக்கள் அளித்தனர். மொத்தம் 191 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 28 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. இந்நிகழ்ச்சியில், வால்பாறை வட்டாட்சியர் வாசுதேவன், நகராட்சித் தலைவர் அழகுசுந்தரவள்ளி மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

மாத்திரைகளில் யோகாசனம்...

உலக யோகா தினத்தையொட்டி யோகப் பயிற்சியின் மூலம் நோய்களில் இருந்து தற்காத்துக்கொள்வோம் என்ற கருத்தை வலியுறுத்தும்விதமாக, 21 யோகப் பயிற்சிகளை மாத்திரைகளில் ஓவியமாக வரைந்திருக்கிறார் கோவையைச் சேர்ந்த கலைஞர் யு.எம்.டி.ராஜா.

யூனியன் பேங்க் ஆப் இந்தியா Union Bank of India
A Government of India Undertaking

Asset Recovery Branch : தபால் பெட்டி எண்.8, எண்.235, 1வது தளம், ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் – 641 001. மொபைல் : 8369578740

கேட்பு அறிவிப்பு

2002 சர்பாசி சட்டம் பிரிவு 13(2)ன் கீழ்

பெறுநர் : 1. கடன்தாரர்கள் : 1 (A). M/s. எக்ஸெல் கலெக்ஷன், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.MA.அப்துல் நசீர், கதவு எண்.3, A.P.M. அபார்ட்மெண்ட், அவ்வையார் வீதி, சூரமங்கலம், சேலம்–636005. **திரு.MA.அப்துல் நசீர்,** கதவு எண்.3, A.P.M. அபார்ட்மெண்ட், அவ்வையார் வீதி, சூரமங்கலம், சேலம்–636005. **1 (B). M/s. எக்ஸெல் கலெக்ஷன், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.MA.அப்துல் நசீர்,** எண்.181/3, மெய்யனூர் பை–பாஸ் ரோடு, மெய்யனூர், சேலம்–636004. **திரு.MA.அப்துல் நசீர்,** எண்.39–1, D 19, ஆசாத் நகர், சேலம் (C), சேலம்–636005. **2. உத்தரவாதமளித்தவர்கள் : திரு.S.முத்துக்குமார்,** த/பெ.திரு.அந்தராம், எண்.12/5 சிவசங்கர் நகர், சேலம்–636008. **திரு.முத்துக்குமார்,** கதவு எண்.77/1 – D– 50, மரியனூர் மெயின் ரோடு, சேலம்–636002.

பொருள் : 2002ம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகள் சீரமைப்பு மற்றும் பிணையநலன் அமலாக்கச் சட்டப் பிரிவு 13(2) உடன் பிரிவு 13(3)ன் படியான அறிவிப்பு

கடன்தாரர்(கள்) **M/s. எக்ஸெல் கலெக்ஷன்** தாங்கள் கீழ்குறிப்பிட்ட கடன்வசதியை எமது **சேலம், ஐந்து ரோடுகள் கிளை(முன்னாள் கார்ப்பொரேஷன் வங்கி, சேலம் அழகாபுரம் கிளை)**யிலிருந்து பெற்று அந்த கணக்கின் நிலுவைகள்/தவணைகள்/வட்டி/இயக்குதலை நிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு, அதாவது வருமான அங்கீகாரம் மற்றும் விவேகமான கணக்கீட்டு விதிகளுக்கிணங்க இல்லாததால் அது **30.09.2017 அன்று** இயங்காச் சொத்து என வகைப்படுத்தப்பட்டது. **30.04.2024 அன்று** தங்கள் கணக்கிலுள்ள நிலுவைத் தொகை **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்)** ஆகும்.

மேற்குறிப்பிட்ட கணக்கில் கடன்தாரரிடமிருந்து வங்கிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை விபரங்கள் கீழ்வருமாறு :

1) ODA - கணக்கு எண். 565141000002794 – கடன் தொகை : ரூ.24,90,000/–, மொத்த நிலுவை 30.04.2024 தேதி அன்று : ரூ.51,97,093.69.

நாங்கள் பலமுறை நினைவுறுத்தியும் தாங்கள் மேற்படி கடன் கணக்கிற்கான நிலுவைத் தொகைக்கு, தொகை எதுவும் செலுத்தவில்லை.

செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிடி சட்டம் 2002–ன் பிரிவு 13(2)ன் விதிகளின்படி, தாங்கள் **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) 30.04.2024 தேதி அன்று** மற்றும் ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள், கடன் பத்திரங்களில் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி செலுத்தி தங்களது கடனை, கேட்பு அறிவிப்பு பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்தி தங்களது பிணையத்திலுள்ள சொத்தினை மீட்டுக் கொள்ள வேண்டும். தவறினால் மேற்கண்ட சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு அல்லது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி, வங்கியிடம் பிணையம் வைத்துள்ள சொத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை அறியவும்.

பிணையச் சொத்து விபரம் : விற்பனை ஆவண எண்.2594/16 நாள் 01.06.2016, விற்பனை ஆவண எண்.2723/16 நாள் 14.06.2016 மற்றும் MOD எண்.2768/16 நாள் 15.06.2016 ஆகியவற்றின்படி அடமானப்படுத்தப்பட்ட அசையாச் சொத்து. இனம் எண்.1 : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 2500 சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் :** அமானுலாஷா நிலத்துக்குக் கிழக்கு, 20 அடி ரோட்டுக்கு மேற்கு, ரோட்டுக்கு வடக்கு, 20 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. இதன் **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 40 அடி, மேல்புறம் தென்வடல் 40 அடி, வடபுறம் கிழமேல் 62 ½ அடி, தென்புறம் கிழமேல் 62 ½ அடி ஆக மொத்தம் 2500 சதுர அடி நிலம் தடவழி உரிமைகள் மற்றும் பிற பயன்பாட்டுரிமைகளுடன் D.மாறமங்கலம் கிராமத்தில் உள்ளது.

இனம் எண்.2(A) : பிளாக்–I : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 625 சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் :** 20 அடி லேஅவுட் ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்குக் கிழக்கு, அப்துல் நசீர் நிலத்துக்கு மேற்கு, 20 அடி அகல ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்கு வடக்கு, 30 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 10 அடி, மேல்புறம் தென்வடல் 10 அடி, வடபுறம் கிழமேல் 62 ½ அடி, தென்புறம் கிழமேல் 62 ½ அடி, ஆக உள்ள நிலம்.

இனம் எண்.2(B) : பிளாக்–II : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், தாரமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலூகா, D.மாறமங்கலம் கிராம சர்வே எண்.111/2Aயில் உள்ள காலி நிலம், விஸ்தீரணம் 504 ¾ சதுர அடி கொண்டது. இதன் **எல்லைகள் வருமாறு :** 20 அடி லேஅவுட் ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்கு கிழக்கு, அப்துல் நசீர் நிலத்துக்கு மேற்கு, 20 அடி அகல ரோடு மற்றும் ரத்தினம் நிலத்துக்கு வடக்கு, 20 அடி அகல ரோட்டுக்குத் தெற்கு. **அளவுகள் :** கிழபுறம் தென்வடல் 40 அடி, மேல்புறம் தென்வடல் குறுக்காக 33 அடி, வடபுறம் கிழமேல் 15 ½ அடி, தென்புறம் கிழமேல் 22 ½ அடி ஆக மொத்தம் சொத்தின் விஸ்தீரணம் [இனம் 2(A) மற்றும் 2(B)–625 சதுர அடி + 504 ¾ சதுர அடி] 1129 ¾ சதுர அடி உடன் தடவழி உரிமைகள் மற்றும் பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த சொத்து, D.மாறமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது.

எனவே நீங்கள் சர்பாஸிச் சட்டம் 2002ன் பிரிவு 13(2)ன் விதிகளுக்கிணங்க **ரூ.51,97,093.69 (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) 30.04.2024 தேதி அன்று** மற்றும் ஒப்புக் கொண்ட வீதாசாரப் படியான மேல் வட்டி செலவினங்களுடன் மற்றும் தாங்கள் செயல்படுத்திய கடன் ஆவணங்களின் குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க தங்களது கடன் நிலுவையை முழுவதுமாக இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 60 தினங்களுக்குள் செலுத்திவிடவும். தவறினால் வங்கி மேற்படி சட்டத்தின்படி எமக்களிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பிரிவு அல்லது அனைத்துப் பிரிவுகளின்படியான உரிமையினைப் பிரயோகித்து மேற்சொன்ன பிணையச் சொத்தின் மீதான அமலாக்க நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)ன்படி இந்த அறிவிப்பினை பெற்றதற்குப் பின்னர் தாங்கள் மேற்படி பிணையச் சொத்தின் மீது வங்கியின் ஒப்புதலின்றி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாதென எச்சரிக்க/தடுக்கப்படுகிறீர்கள்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இக்கணக்கிற்கு முன்னர் வழங்கப்பட்ட சர்பேசி அறிவிப்புகள் திரும்பப் பெறப்படுகிறது.

தேதி : 22.05.2024
இடம் : கோயமுத்தூர்

ஒம்./– அதிகாரம் பெற்ற அலுவலர்
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி

ஆட்சியர் பங்கேற்பு

ஜமாபந்தி நிகழ்ச்சியில் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெறுகிறார் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி.

கோவை, ஜூன் 20: மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் 239 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தலைமை வகித்தார். இதில், காரமடை உள்வட்டத்துக்கு உள்பட்ட காளம்பாளையம், கெம்மாரம்பாளையம், தோலம்பாளையம், வெள்ளியங்காடு ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள், பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை, புதிய குடும்பஅட்டை, இலவச வீட்டு மனை பட்டா, நில அளவை, மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்டவை தொடர்பாக 239 கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மேட்டுப்பாளையம் ஒன்றிய குழுத் தலைவர் மணிமேகலை, மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் வி.பி.சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பொன்னுசாமி (காளம்பாளையம்), நிர்மலா (கெம்மாரம்பாளையம்), ரவிசந்திரன் (தோலம்பாளையம்), ஜீவானந்தம் (வெள்ளியங்காடு) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, மருதூர், காரமடை, பெள்ளாதி, சிக்காரம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கான ஜமாபந்தி வெள்ளிக்கிழமை (ஜூன் 21) நடைபெற உள்ளது.

நெல்லித்துறை, ஓடந்துறை, தேக்கம்பட்டி, சிறுமுகை, ஜடையம்பாளையம், சிக்கதாசம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு ஜூன் 25–ஆம் தேதியும், இரும்பறை, சின்னக்கள்ளிப்பட்டி, மூடுதுறை, இலுப்பநத்தம், பெள்ளேபாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு ஜூன் 26–ஆம் தேதியும் ஜமாபந்தி மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும்

கோவை, ஜூன் 20: தமிழகத்தில் உடனடியாக மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என மத்திய செய்தி ஒலிபரப்பு, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார்.

மேட்டுப்பாளையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின விழாவில் பங்கேற்பதற்காக கோவைக்கு வந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயத்தால் 40–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். மேலும், 100–க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கள்ளக்குறிச்சி சம்பவம் தமிழக அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய கருப்பு தினம். திமுகவினர் தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மதுவிலக்கு கொண்டு வருவோம் என்றனர். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழகம் முழுவதும் போதை கலாசாரம் அதிகரித்துள்ளது. இதற்கு ஒரே தீர்வு மதுவிலக்கை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கள்ளக்குறிச்சி சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து கட்சியின் சார்பில் தலா ரூ.1 லட்சம் நிதி வழங்கியதுடன் இச்சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கு திமுக முழுமையாக பொறுப்பேற்க வேண்டும். இந்த துறையின் அமைச்சர் உடனடியாக பதவி விலக வேண்டும் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு மரக்காணத்தில் இதுபோன்று கள்ளச்சாராயம் குடித்து பலர் இறந்தனர். திமுக அரசு மீது மக்கள் கோபமாக உள்ளனர். எனவே, முதல்வர் ஸ்டாலின் இந்த சம்பவத்துக்கு மன்னிப்பு கேட்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்க்க வேண்டும் என்றார்.

நகைப்பட்டறை உரிமையாளர் கடத்தல் வழக்கு: 6 பேர் கைது

கோவை, ஜூன் 20: கோவையில் நகைப்பட்டறை உரிமையாளர் உள்ளிட்ட 2 பேர் கடத்தப்பட்ட வழக்கில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோவை, ஆர்.எஸ்.புரம் பொன்னையராஜபுரம் முதல் தெருவைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (40), நகைப் பட்டறை நடத்தி வருகிறார். இவரது சகோதரி சுதா மகன் விஷ்ணுவாசன் (22), நகைப் பட்டறை தொழிலாளி. செந்தில்குமார், விஷ்ணுவாசன் ஆகியோர் காரில் கடந்த 17ஆம் தேதி இரவு வெளியே சென்றவர்கள் வீடு திரும்பவில்லை.

அவரது குடும்பத்தினர் பல்வேறு இடங்களில் தேடி வந்த நிலையில், சுதாவுக்கு 18–ஆம் தேதி வாட்ஸ் ஆப் மூலம் அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய நபர், செந்தில்குமார், விஷ்ணுவாசன் ஆகியோரை கடத்திவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், தாங்கள் நகை தயாரித்து தரச் சொல்லியிருந்ததாகவும், ஆனால் சரியாக நகையை செய்து தராமல், நகை குறைபாடாக உள்ளதாகவும் கூறியதோடு, 2 பேரையும் விடுவிக்க வேண்டுமெனில் ரூ.42 லட்சம் தர வேண்டும் எனவும் கூறியதாகத் தெரிகிறது.

இது குறித்து ஆர்.எஸ்.புரம் போலீஸார் நடத்திய விசாரணையில், செந்தில்குமார், விஷ்ணுவாசனை கடத்திச் சென்றது சிவகங்கையைச் சேர்ந்த தனபால், தனசேகர் என்பதும், கடத்தலுக்கு மேலும் சிலர் உதவியதும் தெரியவந்தது.

இதில் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் பதுங்கியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து துணை ஆணையர் சரவணகுமார் தலைமையில் தனிப்படை போலீஸார் சிவகங்கைக்குச் சென்று கடத்தலில் ஈடுபட்ட நபர்களைத் தேடி வந்தனர்.

அப்போது அங்குள்ள ஒரு இடத்தில் பதுங்கியிருந்த தனபால், அவருக்கு உதவிய மாரிமுத்து, ஹரிஹரன், கார்த்திக் என்ற குண்டு கார்த்திக், கார்த்திக் என்ற குட்லு கார்த்திக், கார்த்திக் ராஜா ஆகிய 6 பேரைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து செந்தில்குமார், விஷ்ணுவாசன் ஆகியோரை மீட்டனர்.

இச்சம்பவம் குறித்து போலீஸார் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியைச் சேர்ந்தவர் மங்கையர்க்கரசி. இவர் கோவையில் நகைப் பட்டறை நடத்திவரும் செந்தில்குமாரிடம் தங்க வளையல்கள் செய்து பெற்றுச் சென்றுள்ளார்.

அந்த வளையல்களை அங்குள்ள வங்கியில் அடகுவைக்க மங்கையர்க்கரசி உள்ளிட்டோர் சென்றபோது அது போலி என்பது தெரியவந்தது. இதற்கிடையே, இவர்களுக்கு வங்கியில் உள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான நகையை மீட்கவும் பணம் தேவைப்பட்டுள்ளது. இந்த இரு காரணங்களுக்காக இவர்கள் கோவைக்கு வந்து செந்தில்குமார் உள்ளிட்ட இருவரை கடத்தி ரூ.42 லட்சம் கேட்டு மிரட்டியுள்ளனர். தொடர் விசாரணைக்குப் பின்னர் 6 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், தலைமறைவாக உள்ள மங்கையர்க்கரசி, தனசேகர் உள்ளிட்ட சிலரைத் தேடி வருகிறோம் என்றனர்.

வால்பாறையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

வால்பாறை –பொள்ளாச்சி சாலை அய்யர்பாடி எஸ்டேட் பகுதியில் விழுந்த மரம்.

வால்பாறை, ஜூன் 20: கனமழை காரணமாக வால்பாறை– பொள்ளாச்சி சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்படைந்தது.

வால்பாறை வட்டாரத்தில் கடந்த 3 நாள்களாக தொடர்ந்து இரவு நேரத்தில் கனமழை பெய்து வருகிறது. புதன்கிழமை இரவு தொடங்கிய மழை விடியவிடிய பெய்தது. கனமழை காரணமாக எஸ்டேட் பகுதிகளில் மரங்கள் விழுந்து பாதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில் வால்பாறை– பொள்ளாச்சி சாலை அய்யர்பாடி எஸ்டேட் பகுதியில் சாலையில் வியாழக்கிழமை மர விழுந்தது.

இதைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையினர் அங்கு வந்து மரத்தை வெட்டி அகற்றினர். இதனால் அந்த சாலையில் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிப்படைந்தது. தொடர் கனமழை காரணமாக வால்பாறையில் பள்ளிகளுக்கு மட்டும் வியாழக்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டது.

நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை: சிறுவாணி அணை நீர்மட்டம் உயர்வு

கோவை, ஜூன் 20: சிறுவாணி அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்மழை காரணமாக, அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

கோவை மாநகரில் 26 வார்டுகள் மற்றும் 20–க்கும் மேற்பட்ட நகரையொட்டியுள்ள கிராமங்களுக்கு சிறுவாணி குடிநீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது. கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 20 அடிக்கும் அதிகமாக இருந்த சிறுவாணி அணையின் நீர்மட்டம், கடும் வெயில் காரணமாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் 8 அடிக்கும் குறைவாக சரிந்தது. இந்நிலையில், கடந்த மே மாதத்தில் பெய்த தொடர்மழையால், அணையின் நீர்மட்டம் 10 அடிக்கும் மேல் உயர்ந்தது. அதன் பிறகு, மழை இல்லாததால், அணையின் நீர்மட்டம் மீண்டும் 9 அடிக்கும் கீழ் குறைந்தது. இந்நிலையில், கேரளப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை பெய்து வரும் நிலையில், சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் அடிவாரப் பகுதிகளில் இடைவெளிவிட்டு மழை பெய்துவருவதால் அணைக்கு செல்லும் முக்தியாறு, பட்டியலாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி சிறுவாணி நீர்மட்டம் 9.45 அடியாக உள்ளது.

இது தொடர்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், சிறுவாணி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இடைவெளி விட்டு மழை பெய்து வருகிறது. புதன்கிழமை நிலவரப்படி சிறுவாணி நீர்ப்பிடிப்புப் பகுதியில் 40 மில்லி மீட்டர், அடிவாரத்தில் 38 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போல, ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்தால் சிறுவாணி அணையானது முழுக்கொள்ளளவை எட்ட வாய்ப்புள்ளது' என்றார்.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

மின் ஏல விற்பனை அறிவிப்பு
ஏல நாள் : 26.07.2024
ஏல நேரம் : மதியம் 2.00 முதல் மாலை 6.00 மணி வரை

N S R ரோடு கிளை : 549–A, N S R ரோடு, சாய்பாபா காலனி, கோயமுத்தூர் – 641 011.
போன் : 0422–2453910, 2443910, மின்னஞ்சல் : vjsaib@bankofbaroda.co.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) மற்றும் 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) மற்றும் 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள, பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்" "என்ன உள்ளனவோ அப்படியே" "எப்படி உள்ளதோ உள்ளபடி"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் பெயர் : M/s. ஸ்ரீ குமரன் M சேண்ட், எண்.6, கெம்பஞ்ச கவுடா வீதி, காரமடை, மேட்டுப்பாளையம் – 641 104.
உரிமையாளர் : திரு.P.காமராஜ், க.ச.எண்.481/3, ஆதிக்குட்டை, குப்பனூர் கிராமம், அன்னூர் – 641 653.
உத்தரவாதமளித்தவர் : திருமதி.M.சத்யப்பிரியா, எண்.6, கெம்பஞ்ச கவுடா வீதி, காரமடை, கோயமுத்தூர்–641 104.
நிலுவைத் தொகை : ரூ.35,32,128/– 16.06.2024 தேதி வரை மற்றும் வட்டி மற்றும் பிற செலவுகளுடன்.
சுவாதீன நிலை : அடையாள சுவாதீனம்.

சொத்து விபரம் : கோயமுத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலூகா, காரமடை கிராம க.ச.எண்.13/8பியில் உள்ள 1.87 ஏக்கரில் (தென்மேற்கு மூலைப் பங்கில் உள்ள 1.00 ஏக்கர் நிலம் தவிர்த்து) உள்ள நிலத்திலடங்கிய சொத்தின் எல்லைகள் வருமாறு : **எல்லைகள் மற்றும் அளவுகள் :** அதிகாமுகவர் திரு.K.D.ஜெகநாதன் மற்றும் திரு.K.கோவிந்த்ராஜுக்குச் சொந்தமான 1.00 ஏக்கர் நிலத்துக்கு வடக்கு, 30 அடி ரோடு மற்றும் திருமதி.அம்சவேணிக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, 30 அடி தென்வடல் ரோட்டுக்குக் கிழக்கு, சிக்காரம்பாளையம் கிராம க.ச.எண்.19 நிலத்துக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்குட்பட்ட 0.55 செண்ட் விஸ்தீரண நிலத்துடன் அதில்கட்டப்பட்டுள்ள 4000 சதுர அடி விஸ்தீரண ACC சிமெண்ட்ஷீட் கூரைக்கட்டிடம், கதவு எண்.8–1 உடன் சொத்து வரிவிதிப்பு எண்.11975 மற்றும் அதன் மாமூல் தடவழி உபயோக உரிமையும், வண்டிப்பாதைகளும் சேர்ந்த சொத்து. மேற்படி சொத்து காரமடை பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

சுவாதீன நிலை : அடையாள சுவாதீனம்

நிர்ணய விலை : ரூ.1,59,00,000/– **முன் வைப்புத் தொகை: ரூ.15,90,000/–**
குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ.1,00,000/–

ஏலத் தேதி / நேரம்	**26.07.2024, மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 வரை**

சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம் : **19.07.2024; காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை (முன் அனுமதியின் பேரில்)**

தொடர்பு எண். : 93840 91614;

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://ibapi.in (வங்கி சொத்துக்களின் மின் ஏலத்திற்கான பொதுவான தளம்) மற்றும் https://www.bankofbaroda.in/e-auction.htm இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் மின் ஏலத்தின் சேவையாளரின் www.mstcecommerce.com இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 21.06.2024
இடம் : கோயமுத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா

ADITYA BIRLA CAPITAL **PROTECTING INVESTING FINANCING ADVISING**

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பௌண்ட், வேரவல், குஜராத் - 362266
கிளை முகவரி : 2வது தளம், கட்டட எண் 739, நிசான் ஷோரூம் மேல்தளம், அவினாசி சாலை, கோயம்புத்தூர் - 641 018.

"பிற்சேர்க்கை IV-A"
[பார்க்க விதி 8(6)]
அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் விதி 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் **M/s சக்தி கோல்டு, திரு. நித்யானந்தம் கணேஷ், திருமதி. காஞ்சனாமணி கணேஷ் மற்றும் திருமதி. நிருபமா காஞ்சனாமணி கணேஷ்** ஆகிய கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்தவருக்கு வரவேண்டியுள்ள **19.06.2024 நாள்படியான ரூ. 3,56,10,318.97/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து பத்தாயிரத்து முந்நூற்று பதினெட்டு மற்றும் பைசா தொண்ணூற்று ஏழு மட்டும்)** தொகையைத் தொகை பெறப்படும் நாள் வரையான மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து திரும்பப் பெறும் பொருட்டு, வழக்குரைஞர் ஆணையரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டு பின்பு ஈடுபெற்று கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் **02.05.2024** அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் **25.07.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித் தொகை விவரங்கள் பின்வருமாறு :

அசையாச் சொத்தின் விவரம்	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (10%)
இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் - 'கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், கோயம்புத்தூர் நகரம், அனுப்பர்பாளையம் கிராமம், SF எண் 27/4, தற்போதைய TS எண் 154/12, தற்போதைய (TSLR-இன்படி நகர சர்வே எண் 154/18 & 154/19). இதிலடங்கிய எல்லைகள் பின்வருமாறு : சாஸ்திரி சாலைக்கு வடக்கில், லக்ஷ்மிபாய் மற்றும் N.கணேஷ் ஆகியோரின் சொத்துக்களுக்குத் தெற்கில், V.சுரேஷ் அவர்களின் சொத்துக்குக் கிழக்கில், ஸ்ரீஹரி அவர்களின் சொத்துக்கு மேற்கில், இவற்றுக்கிடையே உள்ள அளவு : கிழக்கு மேற்காக வடக்கில் - 33 அடி 3 அங்குலம், இதிலிருந்து தெற்கு நோக்கி - 2 அடி, இதிலிருந்து கிழக்கு நோக்கி - 15 அடி 7 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்கில் - 100 அடி 4 அங்குலம், கிழக்கு மேற்காகத் தெற்கில் - 42 அடி 8 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்கில் - 109 அடி 10 அங்குலம், அனைத்தும் சேர்த்து 4799.08 சதுர அடி மற்றும் 5000 சதுர அடி பரப்பளவில் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடம் உட்பட தொடர்புடைய தரைத்தளம், முதல்தளம், இரண்டாவது தளம் மற்றும் மூன்றாவது தளம் கொண்ட RCC கட்டடம் மற்றும் அனைத்து பொது வழிப்பாதை உரிமைகளும் புழக்க உரிமைகளும் மற்றும் அங்கு இணைந்துள்ள இதர துணைப்பகுதிகளும் சேர்த்து. பழைய TS எண் 9/288/4, புதிய TS எண் 9/154/A, கதவு எண் 246 பாகம், 247, 248 & 252/A, 252/B, வரித் திரவை எண் 54224322 & 54224323, மின்சாரவாரிய இணைப்பு எண் 03-01-003-121, 03-011-003-125 & 03-011-003-127, நீர் இணைப்பு எண் - ஏதுமில்லை. மேற்படி சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது.	ரூ.- 6,55,54,581/-	ரூ.- 65,55,458/-

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள் : 20.06.2024
இடம் : கோயம்புத்தூர்
LAN : ABFLCOILAP0000138728

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர்
(9677317779)

தொண்டாமுத்தூர் அருகே காட்டு யானை தாக்கி தொழிலாளி காயம்

மதுக்கரை, ஜூன் 20: கோவை, தொண்டாமுத்தூர் ஆட்டுக்கல் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் தொழிலாளி வியாழக்கிழமை படுகாயமடைந்தார்.

கோவை, தொண்டாமுத்தூர் செம்பனூர் அருகே உள்ள ஆட்டுகல் பழங்குடியின குடியிருப்பில் வசித்து வருபவர் ரங்கசாமி (45). இவர், ஆட்டுகல் வனப் பகுதியை ஒட்டிய புளியந்தோப்பில் விறகு எடுப்பதற்காக வியாழக்கிழமை மாலை சென்றார். அப்போது வனப் பகுதியில் இருந்து வெளியே வந்த காட்டு யானை, ரங்கசாமியைத் தாக்கியது.

மேலும் அதே பகுதியில் காட்டு யானை நின்றதால் அங்கிருந்தவர்கள் வனத் துறையினருக்கு உடனடியாக தகவல் அளித்தனர். விரைந்து வந்த வனத் துறையினர் காட்டு யானையை வனப் பகுதிக்குள் விரட்டிவிட்டு, ரங்கசாமியை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட ரங்கசாமிக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இன்றைய நிகழ்ச்சிகள்

கோவை

சர்வதேச யோகா தினம்: ராஜயோக தியானம் மற்றும் ஆசனப் பயிற்சிகள், பிரம்மா குமாரிகள் வித்யாலயம், வேலாண்டிபாளையம், காலை 6.

கலைக் கண்காட்சி: கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம், கஸ்தூரி சீனிவாசன் கலை மையம், அவிநாசி சாலை காலை 10.